# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 மாசி 17, ஸபர் 28, (29-2-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 38


● கூட்டுச்சேரா மாநாடு—

## அடக்கப்படுபவர்களின் கருத்தரங்கு!

இலங்கையில் ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாடு—பாலஸ்தீனியர்கள் உட்பட உலகம் முழுவதும் அடக்கப்படும், நசுக்கப்படும் மக்களின் ஒரு கருத்தரங்கமாக அமையவேண்டுமென லிபியா ஜனாதிபதி கடாபி அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிருர்.

# ‘தனி நாடு’ கோரிக்கை பற்றி

# இலண்டனில் கடிதப் போர்!

## ‘டைம்ஸ்’ ஏட்டில் வெளிவந்த இரண்டு கடிதங்கள்!

தமிழ் ஈழக் கோரிக்கையை ஒட்டியும், வெட்டியும் ‘இலண்டன் டைம்ஸ்’ ஏட்டில் வெளிவந்த இரண்டுகடிதங்களை ‘சிலோன் டெயிலிமிரர்’ ஏடு தனது 21.2.76ம் திகதிய இதழில் Our envoy rebuts U.K. smear compaign எனும் தலைப்பில் ஆசிரியர் குறிப்புக்களுடன் முழுமையாகப் பிரசுரித்திருந்தது. தற்போது அமுலிலுள்ள செய்தித் தணிக்கை விதிகளுக்கு இது முரண்பட்டுத் தோன்றியதால் — நாம் உடனடியாக இதுபற்றி வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த தகுதிவாய்ந்த அதிகாரியுடன் தொடர்பு கொண்டு டெயிலி மிரரில் வெளிவந்த மேற்படி கடிதங்களை சுதந்திரனில் பிரசுரிக்க அனுமதி கோரினேம். அவர் மேலதிகாரியுடன் தொடர்பு கொண்ட பின்னர், ஆசிரியர் குறிப்புக்கள் ஏதுமின்றி மேற்படி கடிதங்களை சுதந்திரனில் பிரசுரிக்க அனுமதி வழங்கினுர். இலண்டன் டைம்ஸில் வெளிவந்து டெயிலி மிரரில் மறுபிரசுரம் செய்யப்பட்ட அக்கடிதங்களை சுதந்திரன் வாசகர்களின் பார்வைக்கு தமிழில் அப்படியே கீழே தருகிறேம்:—

### “பிரிட்டிசார் வருமுன்னர் தனியாட்சி நடத்தியவர் தமிழர்!”

—சேர் ஜோன் போஸ்டர் கியூ.சி.

1976 பெப்ரவரி 4ம் திகதி புதன்கிழமை ‘இலண்டன் டைம்ஸ்’ ஏட்டில் “சிறீலங்காத் தமிழர்கள்” எனும் தலைப்பில் சேர் ஜோன் போஸ்டர் கியூசியும் மற்றும் மூவரும் கூட்டாக எழுதியிருந்த கடிதம் வருமாறு:—

ஐயா,

இலங்கை மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக படிப்படியாக அரசியலுரிமைகள் பறிக்கப்பட்டு இப்போது அவர்களது மொழியும் இரண்டாந்தர நிலைக்கு தள்ளப்பட்ட ஒரு நிலையை எதிர்நோக்கி இருக்கிருர்கள் என்பது எங்களில் சிலருக்கே தெரியும். இரண்டாயிரமாண்டு காலத்துக்கு மதிகமாக இலங்கையின் வடக்குப் பகுதியில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள், பிரிட்டிஷார் அங்கு செல்லும் வரை எப்போதும் தனி இனமாக அமைந்து தனியாட்சி நடத்தியவர்கள்.

இப்போது பெப்ரவரி 4ம் திகதி சிறீலங்கா தேசிய அரசு பேரவையில் தமிழர்களுக்கு தனிநாடு வேண்டும் எனும் தீர்மானம் கொடுக்கடபட்டிருக்கிறது. தமிழ் மக்களிடையேயுள்ள நிதானமும், பொறுப்புணர்ச்சியுமுள்ள பேச்சாளர்கள் உட்பட—தமிழ் மக்களின் பரவலான ஆதரவு இத்தீர்மானத்துக்கு இருக்கிறது.

தங்களது பாரம்பரிய உரிமையென்று தாம் கருதுவதை மீளப்பெறும் இந்த முயற்சியில் ஈடுபடும்போது அதை ஒரு சாட்டாகக் கொண்டு வன்முறைத்தாக்குதல்களும் பெருந்தொகையானேர் கைது செய்யப்படுதலும் நடைபெறலாம் என்று இந்த மக்கள் அஞ்சுகிருர்கள். சிறீலங்கா சுதந்திரமடைந்த பின்னர் அவர்கள் பல தடவைகளில் வன்முறைக்கும், அடக்குமுறைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா அரசுக்கு அதன் வேலையென்ன என்பதைச்

—8 ம் பக்கம் பார்க்க

### “தமிழர் தனியாட்சி நடத்தியதற்கு வரலாற்று ஆதாரம் கிடையாது!”

—சிறீலங்கா தூதர் மெண்டிஸ்

ஜோன் போஸ்டர் கியூ. சியின் கடிதத்துக்கு பதிலிறுத்து ‘இலண்டன் டைம்ஸ்’ ஏட்டில் 12. 2 76ல் வெளிவந்திருந்த சிறீலங்கா தூதுவர் திரு. மெண்டிஸ் அவர்களின் பதில் வருமாறு:—

ஐயா,

“இலங்கைத் தமிழர்கள் எப்பொழுதும் தனி இனத்தவராக அமைந்து தனியாட்சி நடத்தியவர்கள்’ என்ற கூற்று வரலாற்று ரீதியான உண்மையல்ல. குறிப்பிட்ட சில காலங்களைத் தவிர—சிறீலங்கா ஒரே ஆட்சியின் கீழ்தான் இருந்து வந்திருக்கிறது என்பது கடந்தகால வரலாறு தெரிந்த எவருக்கும் தெரியும்.

இரண்டாவதாக—பல தடவைகளில் தமிழர்கள் வன்முறையாலும், அடக்குமுறையாலும் துன்புறுத்தப்பட்டிருக்கிருர்கள் என்பதும் — வன்முறைத் தாக்குதலும், பெருந்தொகையாகக் கைது செய்யப்படுதலும் இடம் பெறலாம் என்பதும — உண்மைக்கு மாறுபட்டவையாகவும், தீய நோக்கமுள்ள பிரசாரமாவும் இருக்கிறது. இது சிறீலங்கா அரசுக்கு எதிரான ஒரு பிரசாரமாகும்.

—8 ம் பக்கம் பார்க்க

### “படைபலம், பணப்பலம் பிரசார பலத்திஞல் ஒரு விடுதலைப் போரை தடுத்துவிடமுடியாது!”

### அமெரிக்க வாலிப புரட்சி இயக்கத் தலைவர் கூறுகிருர்!

“ஒரு விடுதலைப் போராட்டத்தை பணப்பலத்திஞலோ, படைபலத்திஞலோ, பிரசாரப்பலத்திஞலோ முறியடித்துவிட முடியாது. அமெரிக்கா, வியட்நாமில் அடைந்த படுதோல்வியை இதற்கு ஒரு நல்ல உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அமெரிக்க படைபலம், பணப்பலம், பிரசாரத் திறமை எவற்றிஞலும் வியட்னும மக்களின விடுதலைப் போரைத் தடுத்துநிறுத்த முடியவில்லை.”


— இவ்வாறு அமெரிக்க புரட்சிவாத வாலிப இயக்கத்தலைவர் திரு. ஸ்டோக்லி பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

“பத்திரிகைகள் அல்ல — மக்கள்தான் புரட்சியை உண்டு பண்ணுகிறவர்கள். மக்களின் புரட்சி இயக்கத்தை ஒருவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. பத்திரிகைப் பிரசாரத்திஞலோ—வேறு எந்தப் பிரசாரத்திஞலோ மக்கள் எழுச்சியை கட்டுப்படுத்திவிட முடியாது” என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி பாடல்கள் —ஒரு கண்ணோட்டம்



— சிலம்புச்செல்வர் ம. பொ. சி. —

தமிழ் இன உணர்ச்சியை வெளிப்படையாக வற்புறுத்தி, இன வழிப்பட்ட ஒருமைப்பாட்டைப்போதிக்கும் இலக்கியங்களைப் படைத்த பெருமை மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கே உரிமை. ஆம்; அவரளவுக்கு இனவுணர்ச்சியை இதய எழுச்சியோடு பாடிய புலவர் அவருக்கு முன்னர் எவருமில்லை. அந்த வகையில் இளங்கோவடிகளையும் மிஞ்சி விட்டார் பாரதியார்.

பாரதியார், இந்தியப் பெருநாட்டில் தேசிய எழுச்சி வெள்ளப்பெருக்கெடுத்தோடிய காலத்தில் வாழ்ந்தவர். அவரும் தேசிய வாதியாக, தேச விடுதலை வீரராக, ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக வாழ்ந்தார்.

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் இந்தியப்பெருநாட்டில் தோன்றிய தேசிய எழுச்சிதான் சுப்பிரமணிய ஐயரை தேசிய மகாகவியாக நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. பாரதியா வாழ்நத காலம் ''தேசிய சகாப்தம்'' என்று சொல்லலாம். அதுவரை மக்களிடையே நிலவி வந்த சாதி, மதம், வருணம், குலம், கோத்திரம் ஆகிய குறுகிய பற்றுக்களெல்லாம் வடக்கே தோன்றி தெற்கு நோக்கித் திரண்டு வந்த தேசிய வெள்ளத்திலே மறைந்து போயின. ஆனல், மொழிப் பற்றும் இனப் பற்றும் அந்தத் தேசிய வெள்ளத்தையும் சமாளித்து நிமிர்ந்து நின்றன. தெற்கு நோக்கிப்பெருக்கெடுத்து வந்த தேசியவெள்ளமானது மொழிப்பற்றையும் இனப் பற்றையும் வளர்த்தன எனவும் சொல்லலாம்.

தேசிய சகாப்தம் தோன்றுவதற்கு முன்பு மொழிப் பற்று மங்கியிருந்தது. இனப் பற்று அறவே இல்லாதிருந்தது. சிலப்பதிகாரத்திற்குப் பின் தமிழில் தோன்றிய இலக்கியங்களெல்லாம் மத வழிப்பட்டவையாக, மன்னர்களைப் புகழ்பவையாக, தெய்வ வழிபாட்டுக்குரியவையாகத்தான் இருந்தன. சங்க காலத்திலே மண்டல உணர்ச்சியும் அரசவிசுவாசமும் இன உணர்ச்சியானது தலையெடுக்காதபடி செய்தன. அந்த நிலையை மாற்றத்தான் தமிழ்இன உணர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் வற்புறுத்தும் சிலப்பதிகாரத்தை இளங்கோ படைத்தாரென்ருலும், அவரது முயற்சி வெற்றி பெறவில்லை.

சிலப்பதிகாரத்திற்குப் பின்தோன்றிய மணிமேகலை சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, பெருங்கதை ஆகிய புறச்சமயக் காப்பியங்களும், சைவ நாயன்மார்களும், வைணவ ஆள்வார்களும் படைத்த பக்திப் பனுவல்களும் கலிங்கத்துப்பரணி, மூத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம் போன்ற மன்னர் புகழ் பாடும் ராசபக்தி இலக்கியங்களும், மற்றும், கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற சமய வழிப்பட்ட காப்பியங்களும் தமிழ் இன உணர்ச்சி தலையெடுக்காதபடி செய்து வந்தன.

இந்த நிலை மாறித் தமிழ் மக்கள் திரும்பவும் தமிழர் என்ற இனவுணர்ச்சிபெற்றதும், அவர்கள் உள்ளங்களில் தமிழ்ப் பற்று தழைத்துச் செழித்ததும் விடுதலைப் போராட்டகாலத்தில்தான். ஆம்; சாதி—சமய—வருணப் பற்றுகளிலிருந்து விடுபட்டு, நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இனப் பற்றும் கொள்ள மக்கள் வாய்ப்பு பெற்றது விடுதலைப்போராட்டக் காலத்திலே தான். நில வழிப்பட்ட நாட்டுப்பற்றும் மொழிவழிப்பட்ட இனப் பற்றும் விடுதலைப்போர்க் களத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளாகும்.

தேசத்தலைவர்கள் சாதாரண மக்களிடம் சென்று, அவர்களுக்குத் தேசாவேகத்தைப்போதிக்க வேண்டியிருந்ததால், நாட்டுமொழியில்—குறிப்பாக, தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் பேசவும், எழுதவும் கடமைப் பட்டவர்களாயினர். வட்டாரப் பெருமைகளை மக்களுக்கு நினைவூட்டி மக்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியிருந்ததால், சேரன் தம்பி சிலம்பிசைத்ததை, கம்பன் என்ெருரு மானிடன் வாழ்ந்ததை, தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததை எடுத்தெடுத்துச் சொல்லி, பிரதேசப் பற்றை வளர்த்தனர் தேசத்தலைவர்கள். பிரதேசப் பற்றை எருவாகப் போட்டுத்தான் தேசியப் பயிரை வளர்த்தனர். சாதிப்பற்று, சமயப் பற்று, வருணப்பற்று ஆகிய குறுகிய பற்றுக்கள் தேசியப் பயிரை வளர்க்காது—அழிக்கும் என்று உணர்ந்ததாலேயே மொழிப் பற்றையும் இனப் பற்றையும் தேசத் தலைவர்கள் தூண்டிவிட்டனர்.

இந்த உண்மையைப் பாரதியாரின் இனவுணர்ச்சி, மொழியுணர்ச்சிப் பாடல்களில் பார்க்க முடிகிறது. பாரதம் முழுவதற்குமான தேசியக்கொடியின் கீழே நிற்கும் தேசபக்த அணிகளைக் காட்டுங்கால், முப்பதுகோடி மக்கள் என்று மொத்தமாகச் சொல்லி விடாமல், இந்துக்கள்—இஸ்லாமியர்—கிறித்துவர் என மதம் மதமாகப் பிரித்துக் காட்டாமல்,

செந்தமிழ் நாட்டுப்
பொருநர்,
சேரத்துவீரர்,
சிந்தை துணிந்த
தெலுங்கர்,
கன்னடர்,
வங்கத்தினேர்,
இந்துஸ்தானத்தர்,

என இனவாரியாகப் பிரித்துக் காட்டி, இனவுணர்ச்சி அடிப்படையில் இந்திய உணர்ச்சியைப் போதிக்கிருர்.

தமிழ் நாட்டுக்குரிய தனிச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுங்கால், கல்வியிற் சிறந்த நாடு; கம்பன் பிறந்த நாடு; வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் பெற்ற நாடு, — என்றெல்லாம் பெருமிதத்தோடு கூறுகின்ருர். தன் தாய் வீடான தமிழ் நாடு, முப்புறத்திலும் கடல் நீரையும் ஒருபுறத்தில் மலையையும் பாதுகாப்பு அரண்களாகக் கொண்டு திகழும் தனி நாடு — என்று சொல்வதிலே பாரதியார் இன்பங் காண்கின்ருர். இதனை,

''நீலத்திரை கடலோரத்
திலே—நித்தம்
நின்று தவஞ்செய் குமரி
எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்
றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்
நாடு''

என்ற பாடலிலே பார்க்கிறோம்.

தேசியக் கவி பாரதியார், இனவெறியையும் விரும்புகிருரோ என்று ஐயுறத்தக்க வகையிலே கொஞ்சம் வரம்புமீறியும் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் எழுச்சியோடுபோதிக்கிருர்.

''செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே

என்று வெறி பிடித்துப் பாடுகிருர்.

''யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல்
வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சியில்லை.

என்று, இந்திய சமுதாயத்திலுள்ள இதர இனங்களைப் பின்னுக்குத் தள்ளித் தமிழருக்கு முன்னிடந் தருகின்ருர்.

தமிழ்த்தாயே தன் மக்களைப் பார்த்துப் பேசுவது போன்ற ஒரு காட்சியைப் படைக்கும் பாடலொன்றையும் பாடியுள்ளார். ஆம்; தமிழருக்கு ஈன்றதாய் வேறு; செவிலித்தாய் வேறு என்பது பாரதியின் கருத்து. ஈன்றதாய், தமிழ்த்தாய்; செவிலித்தாய், பாரதத் தாய்! இதனை உணர்த்தவே தமிழ் மொழிக்குத் தாய் வடிவந்தந்து, அந்தத் தாயையும் பேச வைதது, தமிழருக்கு அவள் மூலம் அறிவுரை கூறுகிருர்,

''தமிழ்ச் சாதி'' என்ெருரு பாடல் தந்துள்ளார் பாரதியார். ஆம்! ''இனம்'' என்ற பொருளிலே ''சாதி'' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழ் பேசுவோர், தலை தலையாக எண்ணத்தக்க சந்தைக் கூட்டத்தாரல்லர்; பொருளற்ற ஆசார அனுஷ்டானங்களைக்கொண்ட கூட்டத்தாரல்லர்; தனிநாடு; தனிமொழி; தனிவரலாறு; தனியான பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரு தேசிய இனத்தார் என்பதனை அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்ருர். இதனை, ''தமிழச்சாதி'' என்ற பாடலிலே வரிக்கு வரி காண்கின்றேம்.

தமிழ்ச் சாதிக்குக் கேடு செய்வது ''விதி''யேயானலும், அந்த விதிக்கும் வினவிடுக்கத் துணிகிறது பாரதியாரின் இனப்பற்று. ஆம்;

''விதியே விதியே
தமிழச் சாதியை
என்செயக் கருதி
இருக்கின்ருயடா?''

என்று, 'அடா' போட்டு ''விதி'' என்னும் பயலுக்கு வினவிடுக்கிருர்.

பாரதியாரின் ''தேசியம்'' மொழி வேறுபாடுடையது; இன வேறுபாடுடையது; கலாசார வேறுபாடுடையது; அந்த வேற்றுமைகளுக்கிடையே ஒருமைப்பாடுடையது. ஆம்; பன்மையிலே ஒருமை! அவரது தேசிய ஒருமைப்பாடு ஏகப்பிண்டமல்ல; சமஷ்டி!

பாரதியார், தமிழ் மொழிப்பற்றையும் தமிழ் இனப் பற்றையும் தமிழ் நாட்டுப் பற்றையும் பாபபாவுக்கும் போதிக்கிருர் — அதாவது, தாய்ப் பாலோடு சேர்த்து ஊட்டுகிருர். பாப்பாப் பாட்டிலே, ''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'' என்கிருர்.

பாரத அன்னையை — இந்துஸ்தானத்தை வழிபட பாப்பாவைத் தூண்டும் பாரதியார்,

''தமிழ்த்திருநாடுதன்னைப்
பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி
பாப்பா!''

என்று பாடுகின்ருர். பாரதத்தை வழிபடுவதும் தமிழ் நாட்டைத் தன்னுள் பெற்ற பெரு நாடு என்பதற்காகத் தானும்!

பாரதப் பெருநாட்டை வாழ்த்த விரும்பிய பாரதியார், முதலில் ''வாழிய செந்தமிழ்'' என்று தமிழை வாழ்த்தி, அடுத்து, ''வாழ்க நற்றமிழர்'' என்று தமிழ் இனத்தாரை வாழ்த்தி விட்டு, இறுதியில் ''வாழிய பாரத மணித் திருநாடு'' என்கிருர். ஆம்; பாரதப் பெருநாட்டின் வாழ்வு தமிழ் மொழியின் — தமிழ் இனத்தின் வாழ்வோடு இணைந்ததாக இருக்கவேண்டும்—அதாவது, தமிழ்ப் பற்றை அழித்து, தமிழ் இன உணர்ச்சியை ஒழித்து, பாரதம் வாழ்வதாக இருக்கக் கூடாது—என்கிருர்.

—வளரும்

## தமிழுணர்வு

'கவிஞர் யுவன்'

சாவிற் தமிழ்பாடிச் சாகவேண்டும் — என்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்!
நாவிற் தமிழ் மணமே வீசவேண்டும் — தன்
நாட்டுணர்வு தமிழாகச் சிறக்கவேண்டும்!
ஓதிற் தமிழ் ஓதி ஓயவேண்டும் — இவ்
வுலகெல்லாம் ஒண்தமிழே ஒலிக்கவேண்டும்!
நீதித் தலத்திற் தமிழ் நிலைக்கவேண்டும்! — ஓர்
நேர்மைத் தமிழ்... ''குறளாய்'' நிலவ வேண்டும்!!

பாட்டால் வளர்ந்த தமிழ் வாழவேண்டும் — இப்
பாரெங்கும் தமிழோசை கேட்கவேண்டும்!
ஏட்டால் உயர்ந்த தமிழ் வாழவேண்டும் — என்
இதய ஒலி தமிழ் ஒலியாய் இலங்கவேண்டும்!
நாட்டார் மனம் தமிழில் ஊறவேண்டும் — அந்
நற்செய்தி கேட்டு நெஞ்சம் வீங்கவேண்டும்!
கூட்டுணர்வு தமிழாலே ஓங்கவேண்டும் — அக்
குறிக்கோளைக் கண்டு மனம் குளிரவேண்டும்!!

சாவிற் தமிழ்பாடிச் சாகவேண்டும் — என்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்!!

சின்னண்ணுவின் சிந்தனைகள் (2)

## சாதியை சாகடிப்போம்!

தமிழினச் சமுதாயம் சாதியமைப்பை பல நூற்ருண்டுகளாக வைத்துக்கொண்டு முன்னேற்றமடையாது பின்தங்கியுள்ளது. ஆதியான தமிழ் சமுதாயத்தில் இன்றைய சாதியமைப்புக்கோ, ரிக்வேதத்தில் சொல்லப்பட்ட சாதியமைப்புக்கோ இடமிருக்கவில்லை. ஒன்றேகுலம்—ஒருவனே தேவன் என்பதுதான் தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கை. இடையில் புகுந்த வியாதியாக இன்று சாதியமைப்பும் பழக்கவழக்கங்களும் மிக்க அநீதியை விளைவித்து எங்களுடைய சமுதாயத்தை உரிமை வாழ்வுக்கு தகுதியற்றதாக்குகிறது. ஆகவே தமிழினம் உரிமைவாழ்வுக்குத் தன்னைத்தகுதியாக்குவதற்கு முதற்படியாக சாதியை முற்ருக ஒழிக்க வேண்டும்.

உரிமை வாழ்வுக்கான இயக்கத்தின் முதற்பாதி சாதியொழிப்பாகும். இரண்டாம் பாதியே உரிமை வாழ்வை நிலை நிறுத்துவதாகும். உரிமை வாழ்வை தமிழினச்சமுதாயம் பெற்றபின்னர் சாதியை ஒழிப்போமென்று சிந்திப்பது பிழை. உரிமை வாழ்வை அமைப்பதற்கு முன்பே எங்கள் சொந்த முயற்சியால் நாங்கள் சாதியை ஒழிக்கவேண்டும். கலப்புத் திருமணம் என்பது இதிலொரு முக்கிய அம்சமாகும். சாதியையொழித்து உரிமை பெற்ற தமிழ் சமுதாயத்தை உருவாக்குவதுதான் எமது இயக்கத்தின் முதல் வேலையாக இருக்கவேண்டும். சாதி செத்தால் உரிமை வாழ்வு பிறக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திராவே! நீ செய்தது சரியா?

## தி. மு கழக ஆட்சியை கவிழ்த்தது முறையா?

கலைஞர் கருணாநிதியின் ஆட்சிக்குத் தமிழகத்தில் தடை!

திராவிடமுன்னேற்றக் கழக நிர்வாகம் திடீர் நிறுத்தம்.

செய்திகேட்டுக் கலங்காத தமிழ் நெஞ்சங்கள் இல்லை. பதறாத உள்ளங்கள் இல்லை.

வடநாட்டு வஞ்சகச் சிறு மதியாளரின் சதி கண்டு வையமே வாய்விட்டுச் சிரிக்கிறது.

நாகரீக உலகம் நாணித் தலை குனிகிறது.

இந்தி வெறியர்களின் இழி செயல் கண்டு எள்ளி நகை பாடுகிறது உலகம்.

செந்தீ பரவுகிறது செந்தமிழர் திருநாட்டில்!

காந்தி பிறந்த நாட்டிலே ஜனநாயகம் காற்றில் பறக்கிறது.

மக்கள் துணை கொண்டு பதவிக்கு வந்த கழகம், மமதையின் துணைகொண்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது.

வன்முறை வெடிக்கவில்லை.

வழிப்பறி நடக்கவில்லை.

கொள்ளை கொலை எங்குமில்லை.

குடி மக்கள் பயந்தலறி ஓடவில்லை.

பின் எதற்காக ஜனாதிபதி ஆட்சி. காங்கிரஸ் பிளவுண்டபோது கழகத்தின் துணை கொண்டு நீடித்தார்களே ஆட்சியை! அதற்குப் பரிசோ இது?

தேர்தல் வழக்கிலே அம்மையாரின் திருகுதாளங்கள் வெளிப்பட்டபோது "இந்திராவே, ஆட்சி நடத்த அருகதையில்லை உனக்கு. இறங்கு பதவியை விட்டு இக்கணமே." என்று பாரதமெங்கும் வெறிக்கூச்சல்கள் வெடித்துக் கிளம்பியவேளையிலே, "சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேடும் கட்சியல்ல நமது கட்சி" என்று அறிக்கை விட்டு அமைதிகாத்தார்களே, தமிழகத்தில்! அதற்குப் பிரதிஉபகாரமோ இது?

"கருணாநிதியின் ஆட்சியிலே தமிழகத்தின் செழிப்பைப் பார்! அது வளம்பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கும் அழகைப்பார்!" எனத் தமிழகத்துக்கு வருகை தந்த அமைச்சர்கள் எல்லோரும் வாயார வாழ்த்திச்சென்றார்களே. அதற்குத் திருஷ்டி கழிக்கப் பரிகாரமாக இந்தப் பாவத்தைச்செய்தார்களோ? பின் எதற்காக ஜனாதிபதி ஆட்சி?

தெலுங்கானாப் பிரச்சினையின்போது தீப்பற்றி எரிந்ததே ஆந்திரா! ஜனாதிபதி ஆட்சி வந்ததா?

'பசுவதைத் தடை' என்ற போர்வையிலே . வேலும், கோலும் ஏந்திய பாதகர்கள் வட இந்திய மானிலங்களிலே பயங்கரச் சம்பவங்களைக் கட்டவிழ்த்துவிட்டு வெறி கொண்டு திரிந்தனரே—

ஜனாதிபதி ஆட்சி வந்ததா?

மராட்டியத் தலைநகரிலே, தென்னிந்தியர்களின் உடமைகளும், உயிர்களும் சிதறடிக்கப்பட்டனவே சிவசேனைப்படையினரால்!

ஜனாதிபதி ஆட்சிவந்ததா?

எல்லைப்புறமானிலங்களில் ஏற்பட்ட இந்து — முஸ்லிம் கலவரங்களினால் பல்லாயிரவர் கொல்லப்பட்டனரே!

ஜனாதிபதி ஆட்சிவந்ததா?

தமிழகமே கண்டும்கேட்டுமிராத முறையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே செந்தீ எனக் கிளம்பிய செந்தமிழ்த் தியாகிகள் பலர் சுட்டுக்கொளுத்தப்பட்டனரே அப்போதிருந்த பக்தவத்சலம் ஆட்சியில்!

ஜனாதிபதி ஆட்சிவந்ததா?

இவற்றுக்கெல்லாம்வராத ஜனாதிபதி ஆட்சி, அமைதி கோலோச்சிய தி. மு. க. ஆட்சியிலே திணிக்கப்பட்டிருக்கிறது 'ஊழல்' என்ற பெயரிலே!

ஊழல்தான் கழக வாட்சியைக்கலைத்ததற்கு உண்மை காரணம் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்திராவை நேரிலே சந்தித்தபோது ஊழல் பட்டியலைக் கையளித்தாரே, எம். ஜி. ஆர்! அப்போது மட்டும் அரசாங்கம் ஊமையாகவிருந்தது ஏன்?

தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் ஊழல் பற்றிப் பெரிதாக ஓலமிட்டபோது வாளாவிருந்தது ஏன்?

காமராஜ் கட்சியினர் ஊழல் பற்றிக் காட்டுக் கூச்சல் எழுப்பியபோது கவனியாமல் இருந்தது ஏன்?

பத்திரிகைகள் ஊழல் பற்றி ஒப்பாரி வைத்து பிலாக்கணம் பாடியபோது, பாராமுகமாகவிருந்தது ஏன்?

மத்திய மந்திரிகளும் ஊழல்பற்றி நித்தம், நித்தம் எடுத்துரைத்தபோது மௌனம் சாதித்தது ஏன்?

'வரட்சி நிதியின் கைக்காட்டு' [illegible] ஒழியக் கப்பிர[illegible] தியபோது வாய்மூடி இருந்தது ஏன்?

கழக எதிரிகள் ஊழல் பற்றி ஓயாது புலம்பியபோது ஓய்ந்திருந்தது ஏன்? இவற்றுக்கெல்லாம்— மௌனம் சாதித்தார்கள் அன்று தமிழ் நாட்டு மானில அரசைக் கவிழ்த்தார்கள் இன்று.

மத்திய அரசின் ஆயுளை நீடித்தார்கள் ஓராண்டால்! தமிழ் நாட்டரசின் ஆயுளைக் குறைத்தார்கள் ஒரு மாதத்தால்!

புத்தர் போதித்த நாட்டிலே—புனிதர் காந்தி அவதரித்த நாட்டிலே—தனக்கென ஒரு நீதி! தமிழ் நாட்டுக்கென ஒரு நீதி!

### எஸ். பெனடிக்ற்

சமநீதி சாய்ந்தது. செங்கோல வளைந்தது.

தி. மு. கவில் மட்டும்தான் ஊழலா?

தமிழகத்தில் மட்டுந்தான் ஊழலா? அப்படி யென்றால் தமிழகம் தவிர்ந்த ஏனைய 12 மானிலங்களிலும் ஆட்சி நடத்துவது யார்? தேவர்களா? மனிதர்களா? கறை படிந்த கரங்களைக் காண முடியாதா அங்கு?

மத்திய அரசிலே ஊழல் இல்லையா? அப்படியென்றால் ஆட்சி நடத்துவது யார்?

காந்திமகானா? அன்றேல் போதி மரத்துப் புத்தரா? ஊழலின்றி ஆட்சி நடத்த! விடை கூறும் பொறுப்பை காலத்தின் கரங்களில் விட்டு விடுவோம்.

அன்று, ஆறாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து வந்த வெள்ளையனின் காலடியில் வீழ்ந்து கிடந்தது தமிழகம் இன்று, ஆயிரத்து ஐநூறு மைலகளுக்கப்பால் உள்ள வடநாட்டானின் காலடியில் வீழ்த்தப்பட்டிருக்கிறது தமிழகம்.


அன்று அடிமை என்ற பெயரால்!

இன்று சுதந்திரம் என்ற பெயரால்!

தமிழனைப் பொறுத்தவரையில் இரண்டுமே ஒன்றுதான். வெள்ளையனும் ஒன்றுதான். வெறிகொண்ட வடவனும் ஒன்றுதான். இன்றைய இலக்கு கருணாநிதி. நாளை......?

ஓராயிரம் வருடங்கள் சென்றாலும், வாராது வந்துதித்த மாமணியே! தமிழகம் பெற்றெடுத்த தமிழ்க் காவலன் கருணாநிதியே, எத்தர்களின் நிலை கண்டு கலங்காதே!

எண்ணத்தால், எழுத்தால், எழுச்சியால், கிளர்ச்சியால் [illegible] வளர்த்தவன் நீ.




கல்லக்குடிப் போராட்டத்திலே தண்டவாளத்திலே, தலைகொடுத்து தமிழனின் தன்மானம் காத்தவன் நீ.

உலகமடங்கிலும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவன் நீ. அண்ணாவின் வலக்சரமாய் ஆருயிர்த்தம்பிகளின் அருங்காவலனாய், நியமிக்கப்பட்டவன் நீ.

இந்தி அரக்கியை விந்தியம்வரை விரட்டியடித்தவன் நீ.

'மதராஸ்" என்ற பெயரையொழித்து, தமிழ்நாடு என்ற பெயர் தாரணி எங்கும் பட்டொளி வீசிப் பறக்கப் பணிபுரிந்தவன் நீ.

மடமையிருள் மண்டிக் கிடந்த தமிழகத்தின் மாயத் திரைகளைக் கிழித்தெறிந்து மறுமலர்ச்சி கண்டவன் நீ.

தமிழன், தமிழனகத்தலை நிமிர்ந்து வாழ உன் வாழ்க்கையையே தத்தம் செய்தவன் நீ. இன்று உனது ஆட்சி கலைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு இதயமும் கொதிக்கும் எரிமலையாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆளவந்தாரின் அட்டூழியம் கண்டு அனல் கக்கிக் கொண்டிருக்கிறது. கரங்கள் கட்டுப்பட்ட நிலையிலே கூண்டினுள் புலியாக ஒவ்வொரு உள்ளமும் குமுறிக் கொண்டிருக்கிறது.

நீ வளர்த்த இனப்பற்றும், மொழிப்பற்றும், எரியும் சுவாலையாகத் தழல் பரப்பிக் கனன்று கொண்டிருக்கிறது. அந்த வெம்மையின் தகிப்பைத் தாங்கமுடியாது தவிக்கப்போகும் தமிழ்நாட்டுத் துரோகிகளின் நிலைகண்டு உலகமே கைகொட்டிச்சிரிக்கப் போகிறது.

நீதி என்றுமே மயங்கியதில்லை.

அநீதி என்றுமே வென்றதில்லை.

வளர்க தி. மு. க!

வாழ்க தமிழகம்!!


### விற்பனைக்கு நெல் குத்தும் மிசின்கள்

No 1 புதிய மிசின்கள் (Rice Hullers) ரூபா 1500/-க்கு குறைக்கப்பட்டுள்ளது. சொற்ப காலத்திற்கு மாத்திரம்.

இல: 2, ரெயில்வே ஸ்டேசன் முகப்பில்
வெள்ளவத்தை,



### சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு— (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதியை நொறுக்கடா தம்பி..!

தொலை நடந்த களைப்பால்
வளைந்து போகிறான் அதோ... நரைத்த
தலை சுமந்த கிழவன்!
அதற்கென்ன போகட்டும்!
அவனை நினைத்து எனக்குக் கவலையில்லை! அவன்
தவணை முடிந்துவிட்டது: நாளைக்குத் தங்கமாட்டான்!
நீ இருக்கிறாயே இளஞ் சிங்கம்!
மாசுபடாப் புதுத் தங்கம்!
நாளைய நாளின் அங்கம்!
என் தம்பி...அதோ
பார் பார் ஒருவன் அங்கே நின்றபடி
வீர் வீர் என்று கத்துகிறான் வழலன்!
சாதியாம் சாதி.. தம்பி
அப்பக்கம் நோக்காதே! தமிழினத்தை
எப்போதோ தொட்ட சனி இன்னும் விலகவில்லை!
திரும்பிப்பார்க்காதே' உன்னைச் சனி பிடித்தால்
அருப்பே நீயும் அழுகிப் போவாய்!...ஆம
என்னடா தம்பி சாதி?
எவன் சொன்னான்? சேரியிலே
பொன்னியைப் போய்ப்பார்க்கச்சொல் பேச!
மேல் சாதிப் பெண்ணிடத்தே
உள்ளவைகள் அத்தனையும்
பொன்னியிடமும் உண்டு
பொய்யில்லைத் தம்பி...
மூக்குண்டு! கண்ணுண்டு! முகமுண்டு!
முழுதும உண்டு அந்தப்
பூச்செண்டைக் கண்டார்கள்
புலவர்களாய்ப் போனதுண்டு!
ஆனாலும்—
கீழ் சாதி யென்றொதுக்கி வைக்கின்றார்... நாலும்
காற்றாதகூட இக்கொடுமை செய்ததில்லை...!
கொடுமை தம்பி! இது கொடுமை!
என்னிடம் என் நண்பன் ஓர் நாள் சொன்னான்
தன்தொண்டை வரண்டு தாகமெடுத்து
ஆரோ மண்டை வரண்டுபோன
ஒருவரிடம் போய்த் தண்ணீர் கேட்டானும்!
''என்ன சாதி நீர்'' என்று கேட்டாராம் பெரியார்!
''என்ன நீராவது தாருங்கள்...
குளிர் நீரானாலும் சரி
சுடு நீரானாலும சரி'' என்றானும் நண்பன்
"அட...அதைக் கேட்க வில்லையப்பா—
என்ன சாதி நீர் என்றாராம்...
தாகத்துக் கென்ன ஐயா சாதி?' எனக்கேட்டு
நண்பன் குயில் விரட்டும் அந்தக்
காகத்தின் கூட்டைவிட்டு வெளிவந்தானும்!
தண்ணீர் தேடிப் போனவன்
கண்ணீரோடு வெளிவந்த கதை கேட்டாயா தம்பி!
பார் தம்பி பாரடா பார்!
மேல் சாதிக்காரன் வீட்டினிலே—
நாய்க்குப்பால் கிடைக்கும்!
குப்பை மேய்ந்த கோழியின்
வாய்க்கும் தீன் கிடைக்கும்!
மனிதனுக்கு மட்டுமிங்கே
நீர் தரவும் மனிதனில்லை
என்ன கொடுமை யென்று எண்ணிப்பார்!
மூளையெல்லாம் துருப்பிடித்தோர்
இதுமட்டுமா செய்கின்றார்! கோயிலிலும்
தாழை வைத்துக் கதவடைக்கும்
தருக்கர் கதை கேட்டிலையோ?
கேள் தம்பி...!
எட்டாத தூரத்திலிருக்கும் நிலவினுக்கும்
மனிதன் போய்வந்து
விட்ட இந்த நேரத்தில் வீட்டுக்குப்பக்கத்தே
இருக்கின்ற திருவிழாக் கோவிலுக்குள்
இட்டப்பன் போவதற்கு வழியில்லை!
கீழசாதிக்காரனும் உள்நுழைந்தால்
எட்டி உதைக்கின்றார்
இது கழுதைச் சாதிகாணே!
என் தம்பி இயம்பு!
தம்பி இள முகையே!
நாளைய உலகை அலங்கரிக்கவந்த
பொன் நகையே!
வா! இப்பக்கம் வா!
இது தான் புத்துலகம்!
அப்பக்கம் உள்ள அழுக்கெல்லாம் இங்கில்லை!
அழகுலகம் இவ்வுலகம்
அனைவருக்கும் ஒரே உலகம்!

காசி ஆனந்தன்

# தந்தை செல்வாவின் 79வது பிறந்த நாள் விழா!

## தேசியரீதியில் கொண்டாட ஏற்பாடுகள்!

**எதிர்வரும் மார்ச் 31ல் வரும் தந்தை செல்வநாயகம் அவர்களது 79வது பிறந்த தினத்தைத் தமிழ் மக்கள் இவ்வாண்டு தேசிய ரீதியில் மிகமிக விரிவாகக் கொண்டாடவிருக்கிறார்கள். தேசியத் தலைவர்களது பிறந்த தினம், நினைவு தினம் ஆகியவற்றைத் தேசிய வைபவமாகக் கொண்டாடுவது அவர்களது இலட்சியத்தை மென்மேலும் முன்னேற்றும் ஒரு எத்தனமாகவே கருதப்படும்; கருதப்படல்வேண்டும்.**

அதே அடிப்படையில்தான் மலேசியாவில் பிறந்து ஈழத்தில் தமிழ் மக்களின் நிகரற்ற தலைவராகவும் தீர்க்கதரிசியாகவும் விளங்கும் தந்தை செல்வநாயகம் அவர்களது பிறந்த தினமும் முன்னெப்போதும் நடைபெறாத அளவுக்கு இலங்கையிலும் இலங்கைக்கு அப்பால் மலேசியா, சிங்கப்பூர் தமிழ் நாடு, இங்கிலாந்த, அமெரிக்கா, கனடா, பிஜி, மொரீஷியஸ் போன்ற தமிழர் வாழும் உலக நாடுகளிலும் கொண்டாடப்படும். மேற்படி நாடுகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தமிழர் இயக்கங்கள், தமிழர் பண்பாட்டுகழகங்கள் அதற்கான நடவடிக்கைகளை இப்போதிருந்தே ஒழுங்கு செய்வது விரும்பத்தக்கது.

தமிழகத்தில் அடுத்து ஒன்பது ஆண்டு காலம் ஆட்சியில் இருந்த காரணத்தால் எங்கே இந்திய யூனியன் அரசின் வெளிநாட்டுக் கொள்கைக்கு புறம்பாக நடந்துவிட்டதாகப் புகார் கிளப்பிவிடுவார்களோ என்று அடக்கமாகவும் அமைதியாகவும் இதுகாறும் ஈழத் தமிழர் தந்தை செல்வாவின் பிறந்த தினங்களைக் கொண்டாடிவந்த தி.மு.க. அரசு, ஆட்சிப் பொறுப்பை அகற்றியிருக்கின்ற நேரத்தில் சற்று தடல்புடலாகவே தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை (கூட்டங்களுக்கான தடை நீக்கப்படும் பட்சத்தில்) கொண்டாடு மளவுக்கு தி.மு.க தலைவர்கள் விடுதலை பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டில் உலகத் தமிழ் இளைஞர் பேரவை சென்னையில் நடத்திய தமிழர் தந்தை செல்வாவின் பிறந்ததினவிழா வைபவத்துக்கு தமிழக அரசின் முதல்வராக இருந்தபோதே கலைஞர் கருணாநிதி தலைமை வகித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. தி.மு.க. ஏடுகளும் ஏனைய தமிழக ஏடுகளும் தந்தை செல்வாவின் பிறந்த தின வைபவத்தையொட்டி செய்திகளும், சிறப்புக் கட்டுரைகளும் வெளியிட்டிருந்தன. தற்போது தமிழக சிறையில் இருக்கும் முரசொலி அடியார் தாம் நடத்திவரக்கூடிய தமது சொந்தப் பத்திரிகையான நீட்டோலையை சிறப்பு மலராகவே வெளியிட்டிருந்தார். தமிழ் ஏந்தல் ஈழவேந்தனின் கைவண்ணத்தையும் தமிழக ஏடுகளில் நாம் காணக்கூடியதாக விருந்தது இவ்வாண்டு மலேசியா சிங்கப்பூர் பி.பி.சி. வானொலி நிலையங்களது தமிழோசையிலும் மேற்படி வைபவத்தின் தாக்கத்தை எதிர்நோக்குவோம.

''மலேசியா சிங்கப்பூரில் நூற்றாண்டு காலம் இலங்கையா 'என்ற தமது நூலில் மலேசியாவைச் சேர்ந்த திரு. துரைசிங்கம் என்பார் மலேசியாவில் பிறந்து இலங்கையில் தமிழர்களுக்குத் தலைமை தாங்குபவர்களாக தந்தை செல்வா, திரு. மு. திருச்செல்வம் இருவரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளதுடன் ஒளிப்படங்களையும வெளியிட்டுள்ளார் யாழ். பொதுசன நூல் நிலையத்திலும் இந்நூல் உளளது. தந்தை செல்வாவை ஈழத் தமிழருக்கு ஈந்தோம என்பதில் மலாயத் தமிழர் பெருமைப்படலாம் — சிங்கப்பூர் அரசுக்கு வெளிநாட்டு அமைச்சர் திரு. இராசரத்தினத்தை அளித்தவர்கள்



தாம் என்று இலங்கைத் தமிழர் பெருமைகொள்வது போன்று.

தனது பெரியார்களைப் போற்றி வாழாத நாடு உலகில் எங்கும் தலையெடுத்ததாக வரலாறு இல்லை. தீர்க்கதரிசிகளுக்கு தமது சொந்த ஊரில் மதிப்பு இல்லை என்ற வார்த்தையை இலங்கைத் தமிழ் மக்கள் பொய்ப்பித்து விட்டனர். தந்தை செல்வாவுக்கு அயல் நாடுகளில் உள்ள செல்வாக்குக்கும் மதிப்புக்கும்மேலான பாசத்தைத் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் தந்தை செல்வா மீது அள்ளிச் சொரிகின்றனர். அதனை எதிர்வரும் மார்ச் 31 நன்கு எடுத்துக்காட்டும்.—திரவியம்.

# செல்வா பிறந்த நாள் கட்டுரைப் போட்டி

தமிழர் கூட்டணித் தலைவர்—மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் எதிர்வரும் 31-3-76 ஆகும். அதையொட்டி தமிழ் இளைஞர்பேரவையின் வவுனியா மாவட்டக் கிளையினர் ஓர் கட்டுரைப்போட்டியை நடாத்தவுள்ளனர். தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று கட்டுரைகளுக்கும் பெர்யவர் பிறந்த நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைக்கான தலைப்புக்கள்— (1) செல்வா பிறந்திலரேல்...! (2) தந்தை செல்வா—ஒரு சகாப்தம் (3) தந்தை செல்வா காணும் கனவு (4) ஈழத்தின் 30 ஆண்டு அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கம்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 15-3-76. அனுப்ப வேண்டிய முகவரி:- த. ம பீற்றர் பொன்கலன்ட் அமைப்பாளர், தமிழ் இளைஞர் பேரவை, நெடுங்கேணி.

● மக்கள் குரல்

# விளையாட்டுத்துறையில் தமிழ் மக்கள் நிலை!

'தமிழ்ப்பகுதிகளில் விளையாட்டுக்களுக்கு ஊக்கம் அளிக்க சுதந்திரன் பத்திரிகை முன்வந்து உதவினால், தமிழ் இளைஞர்களின் திறமையை உலகினுக்கேகாட்ட முடியும். சில பத்திரிகைகளில் சிங்கள இளைஞர்களுக்கு விளையாட்டுத் திற [illegible] வெற்றிக்கிண்ணம் வைத்து போட்டிகளை நடத்தி பரிசு வழங்கி சேவை செய்கிறார்கள். அத்தோடு சிங்களவருடைய விளையாட்டு என்று L. A. பெயர் போட்டு அழைக்கும் அந்த விளையாட்டுக்கும் ஊக்கமளித்து வளர்த்துவருகிறார்கள்.

மேலும், ஏழை இளைஞர்களுக்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்காக மென்பந்து கிரிக்கெட் (Soft Ball Cricket) விளையாட்டுப்போட்டி கிண்ணம் வைத்து நடத்தி வருகிறார்கள். மற்றும் தென் பகுதியில் நடுத்தர வகுப்பினர் பங்கு பெறும் கொழும்பில், டெய்லி நியூஸ் பத்திரிகை 'ஒப்சேவர் பத்திரிகை முதலிய பத்திரிகைகளும் கிரிக்கெட் வெற்றிக்கேடயம் போட்டிகளை நடத்தி வருகிறார்கள். ஆனால் இப்போட்டிகளில் பங்கு பெற்றுபவர் அநேகமானவர்கள் சிங்களவர்களே.

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விபுலானந்த படிப்பகம்

# 'திடீர்' சுவீகரிப்பு!

## அரசியல் அதிகாரியின் உத்தரவு எனக் கூறி பொத்துவில் பொலிசார் நடவடிக்கை!

**பொத்துவில் கிராமத்தில் ஒருவருடமாய் ஏழைப்பொது மக்களின் வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் புத்துயிர் அளித்துவந்த விபுலானந்த படிப்பகமும். ஏழைச்சிறுர்களின் இலவச கல்விக்கூடமும் 23-2-76 திகதி நண்பகல் 12 மணியளவில் அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரியின் தூண்டுதலின் பேரில் பொத்துவில் பொலிஸ் அதிகாரிகளினுல் ஆறுமணித்தியாலங்களுக்குள் அவ்விடத்தை விட்டு அகற்றப்பட்டதாகத்தெரிகிறது.**

மேற்படிபடிப்பகம்கடந்த வருடம் 14-1-75ம் ஆண்டு தேசியப் பேரவை உறுப்பினர் ஜனுப் எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களினுல் திறந்து வைக்கப்பட்டது. இப்படிப்பகம் பொத்துவில் கிராம முன்னேற்ற சங்க கட்டிடத்தில் சங்க அனுமதியின் பேரில் அமைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து விபுலானந்த இந்து இளைஞர் சங்கத் தீர்மானத்தின்படியும் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்கியும், விபுலானந்தபடிப்பகம விபுலானந்த அரங்கு முன்றலில், சைவத்தையும் தமிழையும் கட்டிக்காத்த வித்தகன் விபுலானந்த அடிகளாருக்கு மாபெரும் சிலை ஒன்று நிறுவப்பட்டது. இதன் திறப்பு விழா—எதிர்வரும் 28-2-76ல் புனித சிவராத்திரி தினத்தன்று பொத்துவில் தேசியப்பேரவை உறுப்பினர் ஜனுப் எம் ஏ. அப்துல் மஜீத் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்படவிருந்தது.

இதற்கிடையில் அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரி விபுலானந்த படிப்பக கட்டிடத்தை உடன் சுவீகரித்து, சிலையையும் அப்புறப்படுத்த பொத்துவில் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடதன் பேரில் மன்றத்திற்குள் எதுவித முன் அறிவித்தலுமின்றி திடீர் என பிரவேசித்த பொலிஸ் அதிகாரிகளும், பொலிஸ்காரர்களும் அமைதியாக நடந்துகொண்டிருந்த பாலர் வகுப்பைஅமர்க்களப்படுத்தி படிப்பக பொறுப்பாளரையும், பாலர் வகுப் பாசிரியையும், இரு தமிழ்ச் சகோதரர்களையும், பயமுறுத்தி, கட்டிட திறவுகோலைக் கேட்டனர். அவர்கள் சங்க அனுமதியின்றி திறப்புத் தரமுடியாது என மறுத்தனர்.

இதனுல் ஆத்திரமடைந்த பொலிசார் தங்களுக்கு விபுலானந்தபடிப் பகத்தை எரித்து விடவும், விபுலானந்த சிலையை அடித்துநொறுக்கி விடவும் அரசியல் அதிகாரி உத்தரவுதந்துள்ளார் என்று கூறி வெறித்தனமாக அங்கிருந்து புத்தகங்களையம் இந்து கலாச்சார ஏடுகளையும், காந்தி, விபுலானந்தர், விவேகானந்தர் போன்ருேரின் திருவுருவப்படங்களையும் மன்றக் தளபாடங்களையும் வெளியே வீசி எறிந்து தீவைக்கமுயன்றபோது விபுலானந்த இந்து இளைஞர்களும், மகளிர்களும், பொது மக்களும் மன்றத்தளபாடங்களை அழுதமுகத்துடன் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்;

கூடிய விரைவில் விபுலானந்த சிலை பொத்துவில் பொலிசாரினுல் அடித்து நொறுக்கபபடக்கூடும் என்பதை அறிந்த பொத்துவில் வாழ் தமிழ்ப்பேசும் மக்கள் கண் கலங்கிய நிலையில் சோகமே உருவாகி இருக்கிருர்கள் பொத்துவில் கிராமமே இந்நிகழ்ச்சிக்குப்பிறகு துயரம் அடைந்து சோர்ந்து கிடக்கிறது,

---

## சமய நூல் இலவச விநியோகம்

28-2-1976 சனிக்கிழமை இரவு மகா சிவராத்திரி விரதம் வருவதை முன்னிட்டு ஆனைக்கோட்டை யூர் சின்னத்துரை நவரத்தினம் தொகுத்து வெளியிட்டுள்ள 'ஆடலரசன்' என்ற நூல்இலவசமாக விநியோகிக்கப்பட இருக்கிறது. இதனைப்பெற விரும்பும் மெய்யடியார்கள் கீழே தரப்பட்டுள்ள ஏதாவதொரு விலாசத்தில் நேரிலோ அல்லது சொந்த விலாசம் எழுதப்பட்டு 15 சத முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளாம்:

1. சரஸ்வதி ஸ்டோர்ஸ், இல. 75—77, செட்டியார் தெரு, கொழும்பு-11

2. ஸ்ரீ வெங்கடேஸ்வரன் இல. 163, மெயின் வீதி, கொழும்பு—.

3. திரு. எஸ். செல்லமுத்துபிள்ளை, இல. 52/1, மூகத்துவாரம் வீதி, கொழும்பு-15

4. வெலிமட ஸ்டோர்ஸ, இல. 141, நான்காம் குறுக்குத்தெரு. கொழும்பு-11

5. சந்திரா ரெக்ஸ்ரைல்ஸ், இல. 149/15, கெய்சர் வீதி, கொழும்பு-11

6 லங்கா மெடிக்கல்ஸ், இல. 3 மாதிரிச் சந்தை, கம்பளை.

---

## செய்தித் தணிக்கை

**அ**வசரகாலச் சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் 1976 பெப்ரவரி 5ம் நாள் சிறீலங்காப் பிரதமரின் விதப்புரையின் மீது சிறீலங்கா குடியரசின் தலைவரினுல்பிரகடனப்படுத்தப்பட்ட (பத்திரிகைத் தணிக்கைப்பற்றிய) ஒழுங்கு விதிகள் வருமாறு:—

(1) சிறீலங்காவின் அரசியலமைப்பின் 18 ஆம் பிரிவினுல் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீளப்பெறும் அல்லது குறைக்கும் உத்தேசத்திட்டம் அல்லது விதப்புரை எதனையும்—

(2) சிறீலங்காவின் ஏதேனும் பாகத்தைத் தனியாகப் பிரிப்பதற்கான அல்லது அதன் ஆள்புல பூரணத்துவத்தை சிதைப்பதற்கான கிளர்ச்சி அல்லது இயக்கம் எதனையும்— (Any agitation or movement for the secession of any part of Sri Lanka or the disruption of the Territorial integrity thereof;)

(3) சாதி, மதப்பூசல்கள் தொடர்பான சம்பவம் எதனையும்—

பதிவுசெய்யும், விவரிக்கும், தகவல் கொடுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது—

சாதிமதப் பூசல்களை உண்டாக்கும், அல்லது சிறீலங்கா வாழ் குடிமக்களின் வெவ்வேறு பிரிவினர்களிடையே ,அல்லது கூட்டத்தாரிடையே வெறுப்புணர்ச்சியை, அல்லது எதிர்ப்புணர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது வளர்க்கும் சாத்தியமுடையதாயிருக்கும்—

நிழற்படம், படவிளக்கக் குறிப்பு, அல்லது வேறு விடயம் எதனையும்— அத்தகைய விடயத்தில் வெளியீடானது தகுதி வாய்ந்த அதிகாரியின் முன் அங்கீகாரத்தைப் பெற்ருலன்றியும் அது அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தில் இருந்தால் தவிரவும்— செய்தித்தாள், சஞ்சிகை, மாத வெளியீடு, துண்டுப்பிரசுரம் அல்லது வேறு வெளியீடு எதனிலும் எவரும் வெளியிடுதலாகாது.

இவ்வொழுங்கு விதிகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆள் எவரையும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடனன்றி—பிணையில் விடுதல் ஆகாது.

---

## விளையாட்டுத்துறை...

—4-ம் பக்கத் தொடர்

மேலும், விளையாட்டுக் கழகங்களும் கிரிக்கட் போட்டி (Club) களை நடத்தி வருகிருர்கள். சரவணமுத்து கிரிக்கட்கேடயம் இதற்கு விளையாடுபவர்களைத்தான் அகில இலங்கை கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது. இருந்த போதிலும், விளையாட்டுத்துறையிலும் தமிழர்களைப் புறக்கணித்து வருகிருர்கள். உதாரணமாக, பல கிரிக்கட் கழகங்களில் தமிழ் சங்கம் (Tamil Union) என்னும் கழகத்தில் நல்ல விளையாட்டு வீரர்கள் இருந்தபோதிலும் சில ஆண்டுகளாக புறக்கணித்து வருகிருர்கள். பெரும்பாலும், சிங்கள ஆட்டக்காரர்களுக்கே (Cricket Board) கிரிக்கட் சபை வாய்ப்பளித்து வருகிறது. இப்படியே தமிழர்களை புறக்கணித்து வருகிருர்கள்.

எனவே தமிழ்ப் பகுதிகளான யாழ்ப்பாணம், சிலாபம், புத்தளம், மன்னர், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மலையகம் முதலிய பிரதேசங்களில் விளையாட்டுக் குழுக்களை அமைக்க தங்கள் பத்திரிகை உதவவேண்டும். உதவ சிரமமாக இருந்தால், தமிழ் மக்களின் உதவியை நாட வேண்டும். நிதி உதவி செய்ய இயலாத நிலையில் உள்ளவர்களுக்கு சிரமதானம் செய்ய வாய்ப்பளிக்கவேண்டும். தமிழ் பகுதிக்கு ஓர் கிரிக்கட் சபை அமைத்து, தமிழ் இளைஞர்களின் திறமை மற்றவர்களுக்குக் காட்டவேண்டும்.

கிரிக்கட் சபை ஒன்றை உருவாக்க ஆலோசனையை, யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளின் அதிபாகளுடைய உதவியையும் பெறமுடியும். யாழ்ப்பாணத்தில் படிக்கும் தமிழ் மாணவர்களின் உதவியைக்கொண்டும், விளையாட்டுக் கழகங்கள் உண்டாக்கி, "கிரிக்கட்கேடயம்" கிடைக்கும் போட்டிகளை நடத்தி, அதிக புள்ளி பெறும் (Club) கழகத்துக்கு (Champion) "சாம்பியன்" கேடயம் அளிக்கவேண்டும். இப்படியே வருடா வருடம் இந்த வெற்றிகேடயம் போட்டினை நடத்தி தமிழ்ப் பகுதி கல்லூரிகளில், நிறுவனங்களில் வேலைபார்க்கும் கிரிக்கட் வீரர்களுக்கு வாய்ப்பளித்து தமிழ் இளைஞர்களுக்கு சேவையாற்ற வேண்டும். இதனுல் தமிழ் மக்களுக்கும், தமிழ்ப் பகுதிக்கும், ஏன் தமிழர்களாகிய எங்களுக்கும் பெருமை சேரும். எங்களை புறக்கணித்தமக்களுக்கும் சவால் விட்டது போல் இருக்கும்.

எனவே சுதந்திரன் பத்திரிகையின் உதவியும், தமிழ் பெரியோர்களின் உதவியும் தேவை. எனவே சுதந்திரன் சகல துறையிலும், தமிழ் மக்களை சுதந்திரமாகவாழ வைக்கவேண்டும். அப்போது தான் "சுதந்திரன்" என்ற பெயர் பொருந்தும்.

—ம. ச. நடராசா,
68, ஆருமய பிளேஸ்,
தெமட்டக்சொடை,
கொழும்பு 9.

● இம் முயற்சியில் ஈடுபடுபவர்களுககு சுதந்திரன் தனது பூரண ஒத்துழைப்பை அளிக்கும் என்று உறுதியளிக்கிறேம்.

—ஆர்.


---


## மில்க்வைற் செய்தி

எல்லோருக்தும் ஏற்ற நல்ல கருத்துக்கள் உள்ள மில்க்வைற் செய்தி படியுங்கள். 10 மில்க்வைற் நீலசோப் அல்லது 1 பார் சோப் அல்லது 1 நீம் வாசனை சோப் அல்லது 1 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
**த பெ. இல். 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் கொழும்புத்துறையில் நடைபெற்ற ஈழவேந்தன் பாராட்டு விழாவில் தமிழேந்தல் ஈழவேந்தன் அவர்கட்கு கொடைவள்ளல் மில்க் வைற் அதிபர் திரு: கனகராசா பொன்னாடை போர்த்தி மகிழும் காட்சி இது.

# “போராளிகள் காத்திருக்கின்றனர்”

## அறிமுக விழாவில் நடந்த போராட்டம்!

“போராளிகள் காத்திருக்கிறார்கள்” என்ற நாவலின் அறிமுக விழாக்கள் இப்பொழுது இலங்கையின் பல இடங்களிலும் நடாத்தப் படுகின்றது. ஆனால் இதில் புதுமை என்னவென்றால் குறிப்பிட்ட ஒரு சிலரே எல்லா இடங்களிலும் நடைபெறும் அறிமுக விழாக்களில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகின்றார்கள். இதைப் பார்க்கும் பொழுது இப்பேச்சாளர்கள் அனைவரும் சம்பளம் பெற்றுக்கொண்டு கூலிக்கு மாரடிக்கிறார்களா என்றே கேட்கத்தோன்றுகிறது!

இதை எழுதியவர் முற்போக்கு எழுத்தாளர் என்று முத்திரை குத்தப்பட்டவர். ஆனால் இவர் தனது நாவலைப் புகழ்ந்து பேசுவிப்பதற்காக தனது அரசியல் சித்தாந்தத்திற்கு எதிரான கிறிஸ்தவ மத போதகர்களிடம் கூட சரணாகதியடைந்துள்ளார். இதனால், இவரின் முற்போக்கு அரசியல், இலக்கியப் போக்கில் அனைவரும் சந்தேகப படுகின்றனர்.

ஒரு க(ல்)லாநிதி; செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்காக இந்த நாவலைப் பற்றி, உண்மைக்குப்புறம்பாக அழவுக்கதிகமாகப் புகழ்ந்து பேசிவருகின்றார். தமிழ் மொழி பற்றி ஆராய்ச்சி செய்ய இருப்பவர்கள் கட்டாயம் படிக்கவேண்டியது இந்நாவல் என்றும், இந்நாவலைப் பாடப் புத்தகமாக வைக்கவேண்டும் என்றும் பேசிவருகின்றார். பாவம் இவர் க(ல்)லாநிதியேதான!

இத்துடன் இந்தக்க(ல்)லாநிதி நிற்காமல் புதுமைப் பித்தனைப் பற்றியும் உழறுகின்றார். புதுமைப்பித்தனை இலக்கிய உலகிற்கு சரியாக அறிமுகப்படுத்தியது. இதம்பர ரகுநாதன் என்னும், “போராளிகள் காத்திருக்கின்றார்கள்” நாவலாசிரியரைப் பற்றி பல கூட்டங்களில் கலந்து கொண்டுதான் சொற்பொழிவாற்றுவதால் தான் அவரை எல்லோருக்—புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறதென்றும், கிளிநொச்சியில் நடந்த மேற்படி நாவல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு பேசும் போது குறிப்பிட்டாராம். இதன் மூலம் ஈழத்தில் புதுமைப்பித்தனும் — ரகுநாதனும் தாங்கள்தான் என்பதை மறைமுகமாகச் சொல்லி விட்டதாக அவர் நினைக்கலாம் ஆனால் பாவம் அவர் இலக்கியம் பற்றிய தனது ஞான சூனியத்தை எல்லோரும் அறிந்து கொள்ள வாய்ப்பளித்து விட்டார் என்பதே உண்மை!

கிளிநொச்சியில் நடந்த அறிமுக விழாவில் செங்கை ஆழியான் வாடைக்காற்று நாவலைவிடவும் ‘போராளிகள் காத்திருக்கிறார்கள்’ பலவிதத்திலும் திறமானதாக இருபபதாக பலரும் குறிப்பிட்டார்கள். ஆனால் ‘போராளிகள் காத்திருக்கிறார்கள்’ நாவலாசிரியரோ வாடைக்காற்று நாவல் மிகத்திறமானதாக எழுதப்பட்டுள்ளதாக வாடைக்காற்று நாவல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்டாரே அப்படியானல் யார் சொல்வது உண்மை?

தமிழ் சினிமாப்பாணியில் எழுதபபட்ட, வர்க்க சமரச் கட்டுரைக் கோவையான போராளிகள் காத்திருக்கிறார்கள் நாவல் பாடப்புத்தகமாக வைக்கத் தகுதியற்றது என்றும், மொழி ஆராய்ச்சி செய்வதற்காகப் படிப்பதற்கு அதில் ஒன்றும் இல்லையென்றும், கிளிநொச்சியில் நடந்த அறிமுக விழாவில் கலந்து கொண்டு பேசிய கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குறிப்பிட்டபொழுது பெருத்த அறிமுக விழாவில் அமளி துமளி ஏற்பட்டது.

பல இளைஞர்கள் இந்த நாவலைக் கண்டித்துப் பேச அனுமதிகேட்ட பொழுதிலும் எல்லோருக்கும் அனுமதி மறுக்கப்பட்டதாயினும், கடைசியில் இளைஞர்களைச் சமாளிக்க முடியாமலே ஒருவரை மூன்று நிமிடம் மட்டும் பேச அனுமதித்தார்கள். அவர் பேசிக்கொண்டு நிற்கும் பொழுது மூன்று நிமிடம் கடந்துவிட்டதாகக் கூறி இடையில் குறிக்கிட்டு அவரைப் பேச விடாது “மைக்”கைப் பறித்து விட்டார்கள்.

இவர்கள் அறிமுக விழாக்கள் வைப்பது தங்களைத் தாங்களே புகழ்வதற்குத் தானா?

நூலாசிரியர் பதிலளித்துப் பேசும்போது நாவலில் வர்க்கப்பிரச்சினை பற்றி எழுதாததற்குக் காரணம் கதை நிகழும் இடமான பாசையூரில் இன்று வர்க்கப் பிரச்சினையே இல்லை என்றார்!

● நூல்மதிப்புரை:

## ஈழவேந்தன் பாராட்டு விழா மலர்

மலரில் எமது எண்ணம் என்ற தலையங்கம் பாராட்டு மலரின் நோக்கினைப் பாங்குடன் பகர தமிழகத்து திருப்பனந்தாள் மடத்தலைவர் “அந்நாட்டு வேந்தர் ஆகிறார்” என்று ஈழவேந்தனை வாழ்த்த “தேமதுரத் தமிழோசை பரவட்டும்” உலகெல்லாம் என்கிறார் நல்லை யம்பதி திருஞான சம்பந்த ஆதினத் தலைவர்.

ஈழவேந்தனைப்போல் ‘பல வேந்தர்கள் தோன்றட்டும்’ என்று வண. செல்வரெத்தினம் அடிகள் செப்பி நிற்க “தனித் தமிழ் தொண்டன்” ஈழவேந்தன் என்று தில்லிப் பல்கலைக்கழக டாக்டர்சாலை இளந்திரையனும் டாக்டர் சாலினி இளந்திரையனும் சாற்றி நிற்க, சொல்லும் செயலும் ஒரு சேரப்பெற்றவர் என்று கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு: மு. வயிரவப்பிள்ளை புகழ் உரை வழங்கியுள்ளார்.

ஈழவேந்தன் பணிமேலும் தொடரட்டும் என்று வித்துவான் வசந்தா வைத்திய நாதன் வாழ்த்தி நிற்கையில் ‘நடமாடும் பல்கலைக்கழகம்’ நம் ஈழவேந்தன் என்கிறார் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன்.

“ஆறில்லா ஊர் பாழ் ஈழவேந்தன் இல்லாத மேடை பாழ்” என்று ஈழவேந்தனின் சொல்லாற்றலை திரு. வே. தங்கவேலு அவர்கள் தகைசான்ற முறையில் எடுத்து இயம்புகையில் ஈழவேந்தன் எம் “கலங்கரை விளக்கம்” என்கிறார் இத்தாந்த நல்லறிஞர் திரு. ஆறுமுகசாமி அவர்கள். மற்றும் முத்து சுப்பிரமணியம் அவர்களோ ‘எனது வழி காட்டி’ உள்ளம் உருக உரைக்கிறார்.

இவை நீங்கலாக மலரில் குவிந்து கிடக்கும் வாழ்த்துப்பாக்களோ பல, அவற்றில் சொட்டும் சுவையை நுகர்வோர் உணர்வர்.

இறுதியில் தமிழ் நெறி ”எனும் தலைப்பில் திருமதி வசந்தா வைத்தியநாதன் வரைந்துள்ள கட்டுரையும் “தமிழன் கண்ட முருகன்” எனும் தலைப்பில் ஈழவேந்தன் வரைந்துள்ள கட்டுரையும் மலரின் தகமையை மிக உச்சத்திற்கு உயர்த்துகிறது.

மலரின் இறுதிப் பகுதியில் ஈழவேந்தனின புகழை.

“ஆழ ஆய்ந்து தமிழ்
எழுதும அழகன்
தாழ வீழ்ந்த தமிழ்
தாங்கு மறவன்!
ஊழை ஓர்ந்து தமிழ்
உதவு தமிழன்
ஈழவேந்தன் தமிழ்
இனிய தமிழே”

என்று காசி ஆனந்தன் சுவைபட மொழிய “‘யார் இந்த ஈழவேந்தன்” என்று ‘பூரணன்’ என்ற எழுத்தாளர் நல்லவினவினைக்கேட்டு தக்க விடையும் கூறும்நிலையில் மலர் நிறைவுபெறுகிறது.

கருங்கல் கூதின் மணம் பரப்பும் இம்மலரை ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் சுவைக்கவேண்டும் என்று கூற விரும்புகிறோம்.

மலரின் விலை ரூபா 2-00 கிடைக்குமிடம், ஈழவேந்தன பாராட்டு விழாச்சபை, 5. விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

## தமிழ் மகளிர் பேரவையின் விவசாயப் பணி!

தமிழர் கூட்டணியின் பெண்கள் அமைப்பான தமிழ் மகளிர் பேரவையினர் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உழைத்துவருகின்றனர். இப்பேரவையின் அளவெட்டிக்கிளை உறுப்பினர்கள் அண்மையில் விவசாய சேவையிலிறங்கி — கதிர் அறுக்கும் பணியிலீடுபட்டு அதனல் கிடைத்த ஊதியத்தை மகளிர்பேரவை நிதிக்காக பேரவையின் பொதுச்செயலாளர் திருமதி அமிர்தலிங்கத்திடம் கையளித்தனர்.

## உரிமை உணர்வு...

—7-ம் பக்கத்தொடர்

சென்றபாதையில் தொட்டு நடக்கின்றனர்.

வேங்கை நிகர் மாந்தர் வீணர் நிழலில் வாழ விரும்ப மாட்டார். மரணம் உறுதி என்றாலும் மகிழ்வோடு அதை வரவேற்பர், உரிமை காக்கும் அறவீரர்!

மலர்ந்த பூ மீண்டும் மொட்டாவதில்லை. வேலியற்றபயிராக எம் விளைநிலம் மாறிவிட்டது. அதில் வேலையற்றதுகள் உட்புகுந்து ஒண்டியிருந்து, உறவு கொண்டாடி, இன்று உரிமை பாராட்டவும் தொடங்கி விட்டன. சோற்றுக்குப் பஞ்சம இல்லை— உரிமை உணர்வுக்கே பஞ்சம்.

எனவே, அஹிம்சையால, அறத்தால், அனபுநெறியால், கட்டுப்பாட்டினல் — உரிமைக்குரல் கொடுப்போம்! செத்த சவங்களே, தண்ணீரின் மேலே மிதக்கும். மலை மலையாகத் திரண்டெழுந்து வரும் அலைகளோடு எதிர் நீச்சல் போடுகின்றவனே நீச்சல் வீரன்! உயிரினும் மேலான உரிமைக்காக என்றும் உழைப்போம்!

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A/40 கார் சிஎல் இலக்கத் தொடர் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் வந்து பார்வையிடலாம்.

திருமதி அனந்ததேவன்,
அராலி தெற்கு, அராலி

## தமிழரசுக்கட்சியில் முஸ்லிம்கள் சேருகின்றனர்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களாக சேர்வதில் முஸ்லிம் இளைஞர்கள் இப்போது அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். அண்மையில் மன்னார் தொகுதியிலுள்ள எருக்கலம்பிட்டியில் தமிழரசுக் கட்சியின் கிளையொன்றை முஸ்லிம்கள் அமைத்துள்ளனர்.

20-2-76 வெள்ளிக்கிழமை மாலை எருக்கலம்பிட்டி பிரதான வீதி எட்டாம் வட்டாரத்திலுள்ள கே. எம். ஏ. கபூர் அவர்களின் வீட்டில் தமிழரசுக்கட்சிக்கிளை திறக்கப்பட்டதுடன் —கருத்தரங்கும் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகியாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எம். எம். சாலிகு (முன்னாள், கிராம சபைத் தலைவர், இணக்க சபைத் தலைவர், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர்.) செயலாளர்: கே. எஸ். ஏ. கபூர், (புத்தக ஆசிரியர்) நிதியாளர்; எம். கே. அபுல் குதா—நிர்வாக சபை உறுப்பினர்கள்; கே. எம். அசீஸ், கே எஸ். சதக்கத்துல்லா, எம். ஐ. மன்சூர், எம். கே. பிர்தவுஸ், ஏ. ஜாவீது, எம். ஸி. தாஸிர் எஸ். எம். கலீல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைஉணர்வு-இறைவன் ஏற்றிய ஒளிப்பிழம்பு!

# வரலாறு கூறும் அப்பட்டமான உண்மைகள்!

**அருள்மிகு. அந்தனிஜான் அழகரசன் எம்.ஏ.**

உண்மையையுணர்த்தும் நக்கீரர்கள் இருக்கும்வரை, கற்பைக் காட்டும் கண்ணகிகள் இருக்கும்வரை அஹிம்சையைப் போதிக்கும் காந்திகள் இருக்கும்வரை, ஓர் இனம் சிறுபான்மையினராய் இருந்தாலும் அது வெற்றிவாகைசூடும். இது திண்ணம். இது வரலாறு கூறும் பேருண்மையாகும்.

நாவலர்களும், அறிஞர்களும், கலைஞர்களும், கவின்மிகு கலைச்செல்வர்களும், உரிமைக்குரல் கொடுக்காது, பகடைக்காய்களாக, பெட்டிப் பாம்புகளாக நாவடக்கம் செய்யும்போது — என்னுடைய சிம்மக்குரல் மேலெழுந்து கடலோசையை அடக்கும்; உரிமைக் குரலை முழக்கும் என்றான் ஆங்கில நாட்டு அரசியல் ஞானி, பேர்க் (Burke) என்பவன்.

உரிமை என்பது ஒருவன் தரும் பிச்சை அல்ல, தருமமும் அல்ல அது பிறப்பால் நமக்கு வந்த சொத்தாகும். பெரும்பான்மையினர் தரும் சலுகைகளையும், மானியங்களையும கண்டு நாம் மயங்கிவிடக்கூடாது.

உரிமைப்போர் என்பது ஓர் அறப்போராகும். அறம் நம் பக்கம் இருக்கிறதா என்று கேட்காமல் அறத்தின் பக்கம் நாம் இருக்கிறோமா என்று கேட்டு நம் உரிமைப் பயணத்தை நாம் தொடரவேண்டும். பெரும்பான்மையினரிடம் தீப்பொறிகக்கும் பெரும் பீரங்கிகளும், உயிர்பறிக்கும் துப்பாக்கிகள் இருந்தாலும் — அறத்தின் பக்கம் நாம் இருந்தால் வெற்றி நமதே! அணுகுண்டைவிட, ஆயுதப்படையைவிட ஆற்றல் மிக்கது அன்புப்படையாகும், அறப்படையாகும். “The moral force is more powerful than the material force.”

இங்கிலாந்து நாட்டிலே சூரியனே அஸ்தமிப்பதில்லை என வீரமுழக்கம் செய்தவர் வின்சன் சேர்ச்சில். காந்தி அண்ணலைப் பார்த்து எள்ளி நகையாடி 'அரை நிர்வாணி' (Half naked Fakir) என்று மட்டமாகப் பேசினவர் வின்சன் சேர்ச்சில். சாதிக்க முடியாததை. உலக அரசியல் தலைவர்கள் சாதிக்க முடியாததை, கத்தியின்றி, இரத்தமின்றி ஓர் அறப்போர் நடத்தி பாரத பூமிக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தவர் காந்தி அண்ணல் என வரலாறு கூறும்.

இன்னும் வரலாற்றின் சுவடிகளை நாம் புரட்டிப் பார்த்தால் பல உண்மைகளை அறிவோம். பெரும்பான்மையினர் அல்ல எப்பொழுதும் வெற்றிவாகை சூடுகின்றவர்கள்—மாருகச் சிறுபான்மையினரே! ரி. எஸ். எலியட் என்னும் கவிஞர் சொல்வதற்கிசைய, மலைச்சரிவுகளை நோக்கி எல்லோரும் ஓடும்போது, அதற்கெதிராக நடப்பவர்களைப் பார்த்து எத்தர் கூட்டம் சிரிக்கும். ஆனல் வெற்றி இவர்களுடையதே என்பதை அவர்கள் உணர்வதில்லை.

புனித அகுஸ்தீனர் கூறுகின்றார், தன்னுடைய சுயசரிதையின் இறுதியிலே. 'தோல்வி அடைந்துவிட்டதாகக் கருதப்பட்டவர்களே, வெற்றி வாகை சூடினர்கள்.”

சரித்திரமே சான்றுகூறும் யார் வெற்றி வீரர்கள்? கிறிஸ்து மறைக்காக இரத்தம் சிந்திய வேத சாட்சிகளா? அல்லது அவர்களைச் சிங்கத்துக்கும், சிறுத்தைக்கும் உணவாகக் கொடுத்த கொடுங்கோல் மன்னன் நீரோவா? உண்மைக்குச் சான்று பகர்ந்து உயிரைக் கொடுத்த சாக்றட்டிசா அல்லது, அவருக்கு நஞ்சு கொடுத்து அவரின் உயிரை அணு அணுவாகச் சித்திரவதை செய்யும்படி தீர்ப்புக் கூறிய நீதிபதிகளா? மன்னுயிர் வாழத் தன் இன்னுயிர் கொடுத்த கிறிஸ்துவா? அல்லது கிறிஸ்துவைச் சாவுக்குக் கையளித்த மூதுகெலும்பில்லாத கோழை — பிலாத்துவா? வரலாறே, உண்மையைக் கூறு.

இலட்சோப இலட்சோப மக்கள் ஹிட்லரைப் பின் தொடரும்போது, அப்பாதையில் செல்லாது, சிறுபான்மையினரின் அணியில் சேர்ந்தார் பொன்ஹோபர் (Bonhoeffer) என்னும் மறையியல்மேதை. இன்று ஹிட்லரின் கூட்டத்தார் குறைவு; அன்று சிறுபான்மையினரின் கூட்டத்தில் சேர்ந்த பொன்ஹோபரை, இன்று இலட்சக் கணக்கானோர் பின்பற்றுகின்றனர். அவர் கொள்கையில் நடக்கின்றனர். அவர்விட்டுச்

—6-ம் பக்கம் பார்க்க

# தி. மு. கழகம் அழியுமா?

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 60 ஆண்டுக்கால வரலாறு உண்டு. “கணக்குத்தகராறு—தொகுதி தகராறு தேர்தல் தகராறு” என்று வந்து, அதனுல் ஒரு கட்சியாக உருப்பெற்றதல்ல, தி. மு. கழகம்.

இது ஒரு மாபெரும் சமுதாயத்தின்—சமூக உணர்ச்சிகளின் சுயமரியாதைக் கொந்தளிப்பால் உருப்பெற்ற இயக்கம்.

இந்த இயக்கத்திற்கு தேர்தலோ—ஆட்சியோ—அதிகார ஆர்ப்பாட்டமோ இலட்சியமல்ல!

இதனுடைய இலட்சியம் கூனிக்குறுகி, நெளிந்து—வளைந்து வாழ்ந்த ஒரு அடக்கப்பட்ட சமுதாயத்தின் சுயமரியாதை வாழ்வுதான்!

இது தெருவோரத்தில் கூடினுலும், கோட்டைக்குப் போனுலும் ஒரே சிந்தனையோடு—சமூக விடுதலைச் சிந்தனையோடு பாடுபடுவதற்கு அதுதான் காரணம்!

அறுபது ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழர் சமுதாயத்துக்கு எண்ணிலடங்காச் சிந்தனைகளையும், சுய உணர்வையும், தன்மான உணர்ச்சியையும் ஊட்டி, இன்று எழுச்சிமிக்கதொரு தமிழ்ச் சமுதாயத்தை மட்டுமல்ல—தமிழர் ஆட்சியையே மலரச் செய்த இயக்கத்தைத் தான், “நாளை அழியும்–மறுநாள் ஒழியும்” என்று, சில “நச்சுமனம் கொண்டோர்” ஆலமரத்தடிச் சோதிடம், சொல்லிக் கொண்டிருக்கிறுர்கள்.

அறுபதாண்டு வரலாற்றுப் பெருமைமிக்க நமது இயக்கம் எதிரிகளையும் எதிர்ப்புக்களையும் சந்திப்பது புதிது அல்ல!

நமது இயக்கத்தின் மொத்த வளர்ச்சியே எதிர்ப்புக்களிடையே வளர்ந்தது தான்.

சமூதாயத்தின் கடைக்கோடி மக்களாக ஆக்கப்பட்டிருந்த நமது இன மக்கள் உரிமைகளைக்கோரி குரல் கொடுத்தபோதே, எதிரிகள் நமது குரல்வளையைப் பற்றிக் கொண்டுதான் நின்றுர்கள்.

என்றுலும், பூட்டப்பட்ட சிங்கம், கதவுடைத்து வெளிப்பட்டதைப் போல் நமது சமுதாயத்தின் உணர்வுகள் எதிரிகளைத் தூசாக்கி வெளிப்பட்டது.

நமது 60 ஆண்டுகால வரலாற்றுச் சின்னமே இன்றைய தி. மு. கழகம். கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்களும் ஒரு தனி மனிதர் அல்ல. ஒரு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் வலிமைமிக்க குரலின் பிரதிநிதி.

கடந்த அறுபது ஆண்டுக் காலத்திலும் யார் யார், எது எதற்காக நமது இயக்கத்தை எதிர்த்தார்களோ, அவர்களின் வாரிசுகளும், கூலிகளும் தான் இன்றைக்கும் கழகத்தையும், கழகத் தலைவரையும் வசை பாடுகிறுர்கள்—மண்ணை வாரித் தூற்றுகிறுர்கள்!

இன்று கழகத் தலைவர் கலைஞர் அவர்களைத் தூற்றுகிற ஒவ்வொருவரும், அவரைத் தான் தனிப்படத் தூற்றுகிறுர்கள் என்று நாம் எண்ணவேண்டியதில்லை.

தமிழ் இனத்தை, தமிழ் இனத்தின் சுயமரியாதையை—அந்த சுயமரியாதைக்காகப்போராடும் நமது கழகத்தை, கழகத்தின் இலட்சோப இலட்சய தொண்டர்களைத்—தனியே வசைபாட முடியாததால்— புழுதிவாரித் தூற்ற முடியாததால் அவைகள் அத்தனையையும் ஒரே மொத்தமாகக் கழகத் தலைவர் மீது கொட்டி மகிழ்கிறுர்கள்!

கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் மீது வீசப்படும் அத்தனை வசைமாரிகளும் நம் மீது வீசப்படுவதுதான்—தமிழ்ச் சமுதாயத்தின் மீது வீசப்படுவதுதான்!

அப்பப்பா! எத்தனை திசையிலிருந்து—எத்தனை விதமான ஏச்சுப்பேச்சுக்கள்!

இத்தனையையும் தாங்கிக்கொள்ள என் தலைவனுக்கு, உள்ள பலத்தையும் மனேதிடத்தையும் தந்த தமிழ் அன்னையை வாழ்த்தி—வணங்குகிறேன்.

“கருணுநிதிக்கு இது கடைசிக்காலம்!”

—நாள்தோறும் மாலை ஏடுகள் சிலவற்றில் இது போன்ற ‘ஆருடங்கள்’ தான் செய்தியாக வருகின்றன!

அந்த வசைவாளர்கள் குறிப்பிடும் ‘காலக்கெடு’ என்பது ‘கருணுநிதி’ என்னும் தமிழ் இனத்தலைவனுக்கு அல்ல—அவன் நடத்தும் வரலாற்றுப் புகழ் மிக்க இயக்கத்துக்கு அவர்கள் வைக்கும் கெடுதான் என்பதை கழகத்தோழன் அறிவான்!

இத்தனைக்கும் நமது இயக்கமும் இயக்கத் தலைவரும் செய்த பழி—பாவம் என்ன? எதற்காக நம் தலைவர் மீது இத்தனை ‘சொல்லடி’ விழுகின்றது? கண்ணை மூடி, கருத்தை ஒரு முனையாக்கி—ஒருகணம் சிந்தித்தால், நமக்கு திகைப்புத்தான் மிஞ்சுகிறது!

கலை ஆர்வம் நெகிழ — கருணை உள்ளங்கொண்ட, அன்பும் பண்பும் நிறைந்த, அமைதியும், ஆற்றல் திறனும் பெற்ற, அடித்தட்டு மக்களைப் பற்றி அயராது சிந்திக்கும் ஒரு ‘அடித்தட்டில் பிறந்த’ பாசமிக்கத் தலைவரை ஏன் இப்படித் தூற்றுகிறுர்கள்? எதற்காக இப்படிச் ‘சொல் மாரி’ பொழிகிறுர்கள்?

இதைச் சிந்தித்தாலே, தாக்கும் எதிரிகளின் நோக்கம் புரியும்!

அவர்கள் தாக்குவது ‘கருணுநிதி’ என்னும் தனி மனிதரை அல்ல — நமது இயக்கத்தின் எழுச்சியை; தமிழர்களின் மறுவாழ்வு உணர்ச்சியை!

நமது எதிரிகளின் நாடித் துடிப்பை நாம் அறிவோம். அவர்களின் பலம் பற்றியும் நமக்குத்தெரியும்.

அவர்கள் வைக்கும் ‘கெடு’ அவர்களுக்கே தவிர கழகத்துக்கு அல்ல!

கழகம் ஆயிரங்காலத்துப் பயிர். அது தமிழ்ச் சமுதாயமும் தமிழ் மொழியும் வாழும் காலம் வரையில் வாழும்.

இந்தக் கழகத்தின் தலைவரை வசைபாடி வம்பு பேசி அழித்து விடலாம் என்று நினைப்பவர்கள் அறிவிலிகள்!

கழகம் அழியும் இயக்கமல்ல, இது அருகம் புல்போல் வேர் விட்ட இயக்கம்! தமிழர்களின் வாழ்வோடு — வளத்தோடு—ஊனேடு—உணர்வோடு கலந்த இயக்கம்.

இதை அழிக்க நினைத்தோரெல்லாம் அழிந்தே போனுர்கள்; இன்று பொய் விற்றுப் பிழைப்போரா அழித்துவிடப் போகிறுர்கள்?

—நாத்திகம் இராமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

## பிரிட்டிசார் வரு...

—1-ம் பக்கத் தொடர்

சொல்வதல்ல எங்கள் நோக்கம். ஆனால் அதிகாரப்பங்கீட்டுப் பிரச்சினையை எதிர்நோக்கிய கனடா, ஐக்கிய இராச்சியம் போன்ற வேறு சில காமன் வெல்த் நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி — இக்கோரிக்கைகளை சிறீலங்கா அரசு தீர்த்து வைக்குமானால் உலகத்தின் மதிப்பை அது சம்பாதித்துக் கொள்ளமுடியும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறுகிறோம்.

ஆனால்—மறுபக்கத்தில், தமிழர்களுக்கு எதிராக வன்முறை அடக்குமுறை பயன்படுத்தப்படுமானால், இலங்கையுடன் தொடர்பு வைத்திருக்கும் ஒவ்வொரு பிரிட்டிஷ் குடிமகனும—எங்கள் பிரிட்டிஷ் அரசு உட்பட — பிரிட்டிஷ் வர்த்தக சமுதாயமும் வர்த்தக பகிஷ்கரிப்பு ஒன்றை மேற்கொள்வதன் மூலம—தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டியே தீருவார்கள்.

சிறீலங்காவிலுள்ள இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் பிரிட்டிஷ் அக்கறையைப் பிரதிபலிப்பதற்காக கீழே கையெழுத்திட்டிருக்கும் நாங்கள் ஒரு குழுவாக அமைந்து இயங்கி வருகிறோம். சிறீலங்கா அரசு 'வர்த்தக பகிஷ்கரிப்பு' பற்றிய அழைப்பும், பயமுறுத்தல் குறிப்பும் தான். அதிகாரப்பங்கீடு பற்றிய பிரச்சினைகளை பிரிட்டன் எதிர் நோக்கியிருக்கும் இவ்வேளையில் இக்கடிதம் பிரசுரிக்கப்பட்டது விபரீதமானது; ஆனால் பிரிட்டன் எதிர் நோக்கும் இவ்விடயங்களையிட்டு இலங்கையிலுள்ள யாரும் இதுவரை அபிப்பிராயம் வெளியிட்டது கிடையாதென்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஒருநாட்டு விவகாரங்களில் இன்னொரு நாடு தலையிடுவதில்லையென்ற கொள்கையின் அடிப்படையில் பிரிட்டனும் சிறீலங்காவும் நட்பு நாடுகளாக நீண்டகாலமாகவேயிருந்து வந்திருக்கின்றன. சில தவறான கருத்துக்களினால் இந்த அடிப்படையிலிருந்து மாறுவதற்கு பிரிட்டிஷ் பொது மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

இந்தப் பிரச்சினையை (தமிழர் பிரச்சினையை) சிறீலங்கா அரசு நீதியாகவும் நியாயமாகவும் தீர்த்து வைக்கும் என்கிற உறுதியை கடிதம் எழுதியவர்களுக்கும் பிரிட்டிஷ் பொது மக்களுக்கும் உறுதியாகக் கூறிவைக்கிறோம்.

உங்கள் விசுவாசமுள்ள

வி. எல். பி. மெண்டிஸ்,
பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர்,
13, ஹைட்பார்க் கார்டின்
W. 2 U. K.

## "தமிழர் தனியாட்சி...

—1-ம் பக்கத் தொடர்

தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற தீர்மானம் இலங்கையில் கொண்டுவரப்பட்ட அதே நேரத்தில் இந்தக் கடிதமும் வெளியிடப்பட்டது துரதிருஷ்டமானது. இந்த சமகால ஒற்றுமை, "இலங்கை அரசுக்கு அதன் வேலையென்ன என்பதைச் சொல்வதல்ல எமது நோக்கம்" என்ற கட்டுரையாளர்களின் கருத்துக்கு முரண்பட்டதாகவே இருக்கிறது. இதுவே இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாகவும் தூண்டுதல் நடவடிக்கையாகவும் கருதக் கூடியதாகவுள்ளது.

இதில் வருத்தப்படுவதற்குரியதென்னவென்றால்,

எங்கள் நம்பிக்கைகளை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள,

ஜோன் போஸ்டர்,
டேவிட் அஸ்ரர்,
றெபேட் போர்லி,
ஜி. மைககல் ஸ்காட்.

2, Hane Court
Temple E. C. 4,
U. K.

# ஊரை தீவில் சிவராத்திரி விழா

புங்குடுதீவு, ஊரைதீவு அருள் நெறி மன்றத்தினர் ஊரைதீவு திறந்தவெளியிலுள்ள பெரியவாணர் அரங்கில் மகா சிவராத்திரிவிழாவை மன்றத்தலைவர் திரு. எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை (28-2-76) கொண்டாடவுள்ளனர்.

ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் மன்றக்கொடியை ஏற்றி வைக்க தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

பிரதம பேச்சாளர்களாக உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் பிரதமவிருந்தினர்களாக தமிழரசுத்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

"தாயா, தாரமா சிறந்தது" என்ற தலைப்பில் திரு. ஆ. இராசகுலசிங்கம் தலைமையிலான பட்டிமன்றமும், "தெய்வம் தந்த பரிசு" "மானங்காத்த மாவீரன்" "அடங்காப் பிடாரி" ஆகிய நாடகங்களும் இன்னிசை விருந்தும் விழாவில் இடம் பெறவுள்ளன.


3வது வாரம்!

செல்லமகால்

மறைப்பேன் மன் காமத்தை யானே குறிப்பின்றி
தும்மல் போல் தோன்றிவிடும்.
—என் செய்வாள் அப்பேதை எனினும்
அவளையும் துணிந்து ஏற்றான் ஒருவன்.
அவன்! அவள்! நிலை விளக்குகிறது.

மயங்குகிறாள் ஒரு மாது

முத்துராமன், சுஜாதா, தேங்காய் —நடித்த

பின்னணி: வாணி ஜெயராம், பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ்

உணர்ச்சிக் காவியம்.

ரீகல் நுவரெலியா

முத்துராமன், கே. ஆர். விஜயா -நடித்த

தீர்க்கசுமங்கலி

3-வது வாரம்

நெல்சன் திருமலை

கல்யாணமாம் கல்யாணம்

2-வது மாதம்

கெபிட்டி

ரீகல் (மட்டு நகர்)

சிவகுமார், தேங்காய்,
செந்தாமரை, லட்சுமி
மனோரமா நடித்த-

கண்மணி ராஜா

பிளாசா 4-வது வாரம்

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, வி. கே. ராமசாமி, மனோரமா,
கே. ஏ. தங்கவேலு, ஏ. சகுந்தலா, சீனிவாசன்,
எம். ஆர். ஆர். வாசு நடித்த—

உங்கள் விருப்பம்

திரைக்கதை—டைரக்ஷன் — கே. கிருஷ்ணமூர்த்தி

2-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் (யாழ் நகர்)

முத்துராமன், நந்திதாபோஸ்,
பண்டரிபாய், சுந்தராஜன்
ராஜகோகிலா, ஜெயசிலன் -நடித்த

தாகம்

இப்பொழுது கெப்பிட்டல்

முத்துராமன், மஞ்சுளா, ஜயந்தி,
சுந்தரராஜன் நடித்த--

ஜெமினியின்

எல்லோரும் நல்லவரே

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—12 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் பெப்ரவரி மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.